
JUPITER PICTURES (P) LTD.
ஜூபிடரின்
தங்கப்பதுமை
கதை-வசனம்
அரு.ராமநாதன்
டைரக்ஷன்-A.S.A.சாமி

# ஜுபிடர் பிக்சர்ஸ் பிரைவேட், லிமிடெட்,

அளிக்கும்

# தங்கப் பதுமை

## நடிகர்கள் :

நடிகர் திலகம்
சிவாஜி கணேசன்
பத்மினி
எம். என் நம்பியார்
எம் என். ராஜம்
கலைவாணர்
என். எஸ். கிருஷ்ணன்
குலதெய்வம்
வி. ஆர் ராஜகோபால்

புளிமூட்டை ராமசாமி
டி பி முத்துலக்ஷ்மி
டி பாலசுப்பிரமணியம்
ஆர் பாலசுப்ரமணியம்
கே. துரைசாமி
எம் ஆர். சாமிநாதன்
டி. ஆர். ராஜகுமாரி

கதை வசனம் : அரு. ராமநாதன்

பாடல்கள் :

உடுமலை நாராயணகவி
ஏ. மருதகாசி
பட்டுக்கோட்டை
கல்யாண சுந்தரம்
கவிஞர் கண்ணதாசன்

இசை அமைப்பு : ... விஸ்வநாதன் — ராமமூர்த்தி

உதவி : ... ஜி. கே. வெங்கடேசன்

குரல் கொடுத்தவர்கள் :

டி. எம். சௌந்தரராஜன்
சிதம்பரம் ஜெயராமன்
சீர்காழி கோவிந்தராஜன்
எஸ். ஸி கிருஷ்ணன்
எம். எல். வசந்தகுமாரி
பி. லீலா

பி சுசீலா
ஏ பி கோமளா
ஜ முனிராணி
ரத்னமாலா
சூலமங்கலம் ராஜலக்ஷ்மி
பகவதி

நடன அமைப்பு :

பி. எஸ் கோபாலகிருஷ்
ணன்
ஹீராலால்

சோகன்லால்
டி ஸி தங்கராஜ்

நடனங்கள் : ... லலிதா
ஈ வி சரோஜா
லக்ஷ்மி ராஜ்யம்—சசி

| | | |
|---|---|---|
| ஒலிப்பதிவு : | ... | பி. ராமசாமி |
| ஒலிப்பதிவு-பாடல்கள் : | ... | வி. சீனிவாச ராகவன்<br>ஏ. கோவிந்தசாமி |
| வசனம் : | ... | எஸ். விஸ்வநாதன் |
| ஸ்டில் படங்கள் : | ... | திருச்சி அருணாசலம்<br>பவனு, விநாயகம் |
| கலை நிர்மாணம் : | ... | டி. வி. எஸ். சர்மா |
| அரங்க அமைப்பு : | ... | எஸ். ரங்கசாமி<br>என். சுந்தரம் |
| மோல்டிங் . | ... | வேலுசாமி<br>ஆறுமுகம் |
| எடிடிங் : | ... | ஏ தங்கராஜ் |
| ஆடை — அணிகள் : | ... | எஸ். நடராஜன் |
| மேக்கப் : | ... | ஹரிபாபு<br>நனுபாய்<br>ஆர். ரங்கசாமி<br>தனக்கோடி |
| அரங்க அலங்காரப் பொருள்கள் | ... | பிலிமோக் கிராப்ட்<br>கிரிமியூசியம்<br>சினிக்கிராப்ட் |
| ஆபரணங்கள் : | | களஞ்சியம் பிரதர்ஸ் |

உதவியாளர்கள் :

| | | |
|---|---|---|
| ஒளிப்பதிவு : | ... | எம். விஸ்வநாத்<br>பி தத்து<br>என். சந்திரசேகரன் |
| ஒலிப்பதிவு | | என். குப்புராவ்<br>எம். எஸ். மணி |
| மேக்கப் : | ... | ஆர். பத்மநாபன்<br>டி. ஷண்முகம் |
| எடிடிங் : | ... | ஏ. நாகராஜன்<br>எஸ். ஜனார்த்தனம்<br>வி. அய்யாசாமி |

| | | |
|---|---|---|
| உடை அலங்காரம் : | ... | டி. ஷண்முகம் |
| | | பி. பொன்னுசாமி |
| தயாரிப்பு : | ... | எம். அப்பன்<br>எஸ். முருகேசன்<br>வி. கேசவன் |
| உதவி டைரக்டர்கள் : | ... | எம். ஜே. சேவியர்<br>என். கோபாலகிருஷ்ண<br>எஸ். ஜகன்னதன் |
| தயாரிப்பு மானேஜர்கள் : | ... | ஈ. சி. எச். சூரியநாராயண |
| | ... | தயாசு வெங்கட்டு |
| உதவி : | ... | பாலகிருஷ்ணன் |
| புளோர் இன்சார்ஜ் : | ... | ஸி. ஸி. அந்தப்பன் |
| எலக்ட்ரீஷன் : | ... | வி. சேஷாத்திரிநாதன்<br>கே. முருகேசன் |

பிராசஸிங் : பிலிம் செண்டர் பிரைவேட் லிமிடெட்,

மதருஸ்–26.

பி. ஸி. ஷிண்டே.

Recorded on R. C. A. & WESTREX SOUND SYSTEM.

| | | |
|---|---|---|
| ஸ்டுடியோ : | ... | நெப்டியூன்<br>ரேவதி |
| தயாரிப்பு நிர்வாகம் : | ... | எம். எஸ். காசிவிஸ்வநாதன் |
| தயாரிப்பாளர் : | ... | எம். சோமசுந்தரம் |
| சீனரியோ - டைரக்ஷன் : | ... | ஏ. எஸ். ஏ. சாமி |

RIGHTS CONTROLLED BY
RADHAKRISHNA FILMS (PRIVATE) LTD.
**H. O. ALLEPPEY**

# தங்கப் பதுமை (கதைச் சுருக்கம்)

ஏழைத் தந்தையின் கட்டுப்பாடுகளினால் உலகம் தெரியாத வெகுளியாக வளர்ந்து; வணிககுமாரி ஒருத்தியின் அன்புப் பிணைப்பினால் செல்வ நாயகனாகி, ஆடற்கணிகை ஒருத்தியின் அழகு மோகத்தால் இன்பக் கவிஞனாகி, அரசிளங் குமாரி ஒருத்தியின் அதிகார வெறியினால் தத்துவ ஞானியாகி இறுதியில் மழலை மொழி மகனால் மனிதனாக மாறியவனின் கதைதான் " தங்கப் பதுமை."

சேரன் செங்குட்டுவன் இமயத்தில் கல்லெடுத்து கண்ண கிக்குச் சிலையமைத்து நாடெங்கும் பத்தினி வணக்கத்தைப் பரப்பிய பிறகு, உறையூரிலுள்ள கண்ணகிக் கோயிலில் ஆடித் திங்கள் விழா நடைபெறுகிறது.

அதில் வீர பத்தினியின் ஆவேசக்கூத்தை ஆடிக் காட்டிய வணிகர் மகளான செல்வி, கூத்தின் வேகம் தாங்காமல் மூர்ச் சித்து விழுகிறாள். அவளுக்கு வைத்தியம் செய்ய வந்த மணி வண்ணனின் கள்ளங் கபடற்ற குழந்தை உள்ளத்தைக் கண்டு செல்வி காதல் கொள்கிறாள். ஆனால் அவளுடைய முன் கோபியான தந்தை முத்துவேலரோ, அவளுக்கு அத்தான் முறையுள்ள வில்லவன் என்பவனுக்கு மணம் முடிக்க விரும்பு கிறார்

கபாலபுரியில் யுத்த சேனாதிபதியாக விளங்கும் வில்லவன் அந்த தேசத்து மன்னனின் தங்கையான ராஜவதனாவை மோகித்து, அரியணையைக் கைப்பற்ற ஆசைப்படுகிறான்.

அவளோ உறையூர் கண்ணகி சிலையின் கண்களில் முத்து வேலர் பதித்திருக்கும் இரண்டு ரத்தினங்களை எப்படியாவது தந்திரமாக எடுத்து வரவேண்டும் என வில்லவனை ஏவுகிறாள். உறையூருக்கு வந்த வில்லவன் தன் தாய் மாமனான முத்து வேலரிடம் செல்வியை மணப்பதற்கு ஸ்தீரிதனமாக கண்ணகி யின் இரண்டு இரத்தினங்களைத் தரவேண்டும் என்று கேட் கிறான். முத்துவேலர் ஆத்திரமுற்று கண்ணகியின் கண்களை எவர் பறிக்க முயன்றாலும், கண் குருடாகிவிடுவார் என்று எச்சரித்து, வில்லவனை விரட்டிவிட்டு ஏழை வைத்திய குமார னான மணிவண்ணனுக்கு செல்வியை அவளுடைய விருப்பப்படி மணமுடித்து வைக்கிறார்.

சேனாதிபதி வில்லவன் அதை அறிந்து ஆத்திரப்படு கிறான். அப்போது கபாலபுரியின் ராஜநர்த்தகியான மாயா மோகினி " என்னால்தான் அந்தச் செல்வியின் குடும்பத்தைச் சீரழிப்பதோடு, கண்ணகியின் ரத்தினங்களையும் கொண்டுவர முடியும். என் அழகால் சாதிக்க முடியாதது இந்த அவனியில் ஏதும் இல்லை" என்று அகம்பாவத்தோடு சபதம் செய்து, " சொன்னதை நிறைவேற்றாவிடில் அழகனைத்தும் அழிக்கப் பட்டுவிடும்" என்ற இளவரசியின் நிபந்தனைக்கும் உட்பட்டு, பின் வைத்தியம் என்ற பெயரால் செல்வியின் கணவன் மணி வண்ணனை தன் உல்லாச மாளிகைக்கு வரவழைத்து உலகம்

தெரியாத வெகுளியாக இருந்த அவனை மயக்கி, உணர்ச்சி மிக்க கலைஞனாக்கி, அவனுடைய சொத்து, சுகம் அத்தனையையும் பறித்து அவனிடம் கபாலபுரி யுத்த தேவதைக்கு அடிமையென "ஆள் விலைப் பிரமாண ஓலையும்" எழுதி வாங்கி விடுகிறாள்.

செல்வியோ தன் மாமனாருக்கு வைத்தியம் செய்து அவரை மரணநோயிலிருந்து காப்பதற்காக, தன் கணவனை அழைத்து வர நடுநிசியில், மாயா மோகினியின் மாளிகைக்கு வருகிறாள். அங்கு வாசலில் வில்லவனால் அடித்து போடப்பட்டுக் கிடக்கும் தன் கணவனைக் கண்டு செல்வி கதறுகிறாள். ஆனால் மாயா மோகினியோ தான் ரசித்த அழகை வேறொருத்தி அடையக் கூடாது என்ற எண்ணத்தால் "மணிவண்ணனைப் போன்ற ஒரு தங்கப் பதுமையைச் செய்து கொடுத்தால்தான் அவன் அடிமை பந்தத்திலிருந்து மீள முடியும். அந்தக் கடன் தீரும் வரை செல்வியின் கைக் குழந்தையை ஈடாக வைத்து வேறொரு குழந்தையும் பெற்றெடுப்பதில்லை யெனவும் சத்தியம் செய்ய வேண்டும்" என்று நிபந்தனைகள் விதிக்கிறாள். அதற்கெல்லாம் உட்பட்டு செல்வி தன் கைக்குழந்தையை ஈடாகக் கொடுத்து விட்டு தன் கணவனை மீட்டுச் செல்கிறாள்.

ஆனால் மகனின் முகத்தில் விழிக்காமலே தந்தை மாண்டு விடுகிறார். அப்போதுதான் மணிவண்ணன் தன் தவறுகளையெல்லாம் உணருகிறான். மனைவி தனக்காகச் செய்த மாபெரும் தியாகங்களையெல்லாம் அறிந்து "இனி என் மனைவியைத் தவிர மற்றொரு மங்கையை மனதாலும் தீண்டேன்" என்று சத்தியமும் செய்கிறான்.

அதன் பிறகு அவன் வைத்தியத் தொழிலில் பணம் ஈட்டி தங்கப் பதுமை செய்து கணிகையின் கடன் தீர்த்து குழந்தையை மீட்பதற்காக மனைவியுடன் கபாலபுரிக்கு வருகிறான்.

அங்கு அந் நகரத்து மன்னர் தன் தீரா தலைநோவை குணப்படுத்தினால் தங்கப்பதுமை தருவதாகவும், குணப்படுத்தா விடில் கொடுந் தண்டனை விதிப்பதாகவும் கட்டளையிடுகிறார்.

ஆனால் அரசரின் தங்கையோ அறுவை வைத்தியம் என்ற பெயரால் அரசரை கொன்று விட்டால் மணிவண்ணனுக்குத் தான் ஆளப்போகும் தங்கச் சிம்மாசனத்தில் சரிபாதி இடம் தருவதாக ஆசை காட்டுகிறாள். அவனைப் புறக்கணித்தால் அவனுடைய தலை மட்டுமல்ல அவனுடைய மனைவி மகனின் நிலையும் மோசமாகிவிடும் தர்ம சங்கடமும் ஏற்படுகிறது.

இனி தத்துவ ஞானியாகிவிட்ட மணிவண்ணனின் போக்கு என்ன? அவனது இலட்சியத்தின் கதி என்ன? அன்பால் உலகில் அடைய முடியாதது எதுவும் இல்லை என்று நம்பும் செல்வி, அழகால் உலகில் அடைய முடியாதது எதுவும் இல்லை என்று நம்பும் மாயாமோகினி; அதிகாரத்தால் உலகில் அடைய முடியாதது எதுவும் இல்லை என்று நம்பும் இளவரசி ராஜவதனா-இவர்களின் கொள்கைகளால் உண்டான விளைவுகள் என்ன? வெள்ளித் திரை விளக்கம் தரும்.

## சித்தர் விருத்தம்

வானம் பொய்யாது வளம் பிழைப் பறியாது
நீள் நில வேந்தர் கொற்றம் சிதையாது
பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு
பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு

இயற்றியவர் — கவிஞர் கண்ணதாசன்

பாடியவர்கள் — பி. லீலா & கோரஸ்.

எங்கள் குல நாயகியே கண்ணகியம்மா — நல்ல
இன்னமுதாய் வந்துதித்தாய் கண்ணகியம்மா

தங்கத் தமிழ் நாட்டினிலே கண்ணகியம்மா
கற்புத் தாயாக வந்துதித்தாய் கண்ணகியம்மா

கோவலர்க்கு மனையான கண்ணகியம்மா
பாண்டி காவலர்க்கு பகையான கண்ணகியம்மா

பாவலர்க்கு கவியான கண்ணகியம்மா
தமிழ் பாமரர்க்கு பெருமை தந்த கண்ணகியம்மா

கண்ணகியம்மா — எங்கள் கண்ணகியம்மா
கற்புக்கன்னியர்க்கு தெய்வமான கண்ணகியம்மா
கண்ணகியம்மா — எங்கள் கண்ணகியம்மா

மாலையிட்ட கணவனோடு காவிரிபூம்பட்டினத்தில்
மணமிகுந்த வாழ்ந்திருந்த நாளிலே கொடி
மாதவியாள் ஆடவந்தாள் ஊரிலே
பொன்மாலை கொண்ட மணவாளன்
மாதவியை பின்பின் தொடர்ந்தும்
வாழ்கவென வாழ்த்தி நின்றாய் வாழ்விலே
அவன் வரவை எண்ணி பெருமை கொண்டாய் தேவியே
உயர் பெருமை கொண்டாயே — தமிழ்
பெண்களின் தாயே
உன்னைத்தாள் பணிந்தோம் — சீர்பெறவே அருள்
[புரிவாயே (கண்ணகியம்மா)

மாதவிக் கொடியின் காதலுக்கெனவே
பொன் பொருள் நீ தந்தாய்
நாதனின் சுகமே என் சுகமென்றாய்
உடல் நலிவிலும் பணி செய்தாய்
வேதனைக் கோவலன் வீடு திரும்பியும்
வெறுத்த தில்லைநீயே
மணிநாதம் ஒலித்திடும் பாதசிலம்பினை

கொள்கென கொடுத்தாயே
கால்கள் நோக அந்த மாடமதுரை வரை
கணவனே தொடர்ந்தாயே — அங்கு
ஆயர் குலத்திலே பெருங்குடிமகள் நீ
அடைக்கலம் அடைந்தாயே
மாயக் கொல்லனின் சதியால்
கோவலன் மாண்டதை அறிந்தாயே
எங்கள் தூயவளே நீ புலியெனச் சீறி
துள்ளி எழுந்தாயே
தூயவளே நீயே துள்ளி எழுந்தாயே
கொற்றம் எங்கே?
கொற்றம் எங்கே?
குற்றம் படிந்த குடையெங்கே?
கட்டளையிடுமுன் அறிவெங்கே
காவலர் தந்த சிலம்பெங்கே?
சிலம்பெங்கே? சிலம்பெங்கே?
புலம்பும் ஒலிச்சிலம்பை எடுத்தே
மணிப்பொரிகள் சிதற முன்னர் உடைத்தே
களங்கப்பெயர் முழுதும் துடைத்தே
மதுரை கதிகள் கலங்கப் போர் தொடுத்தே
வானகமே, வையகமே, சொல்வீர் என் கணவன்
[கள்வனோ
செங்கதிர் செல்வனே நீ சொல்
என் கணவன் கள்வனோ
கள்வனோ என் கணவன் கள்வனோ
எட்டு திசை கொட்டிக்குமுறிட
சடசடவென தெருவிலே
கொற்றக்குடை சுற்றம் பதறிட
படபட பட வெந்தணலிலே
பட்டுபல செத்துக்கருகிட
பத்தினியே உன் விழியிலே
வாழும் புவி மூழ்கித்துயர்பட
ஊழிச்சதுர் பல ஆடியே.

இயற்றியவர்
உடுமலை நாராயணக்கவி

பாடியவர்கள்
A. P. கோமளா, ஜமுனாராணி
& கோரஸ்.

பல்லவி

விழி வேல் வீச்சிலே கனி வாய்ப்பேச்சிலே — பெண்கள்
வீரர்தமை வெல்வார் ஒரே மூச்சிலே

### அனுபல்லவி

நல்ல சீராரும் சதுரங்க சேனையஞ்சவே
நின்று போராடும் பலவான்கள் யாரும் கொஞ்சவே
வந்து நேரில் தஞ்சமே என்று பாரில கெஞ்சவே
பெண்கள் பணியாளராய்ச் சொல்லைக் கேளாரோ (விழி)

### சரணம்

படைகாட்டுவார் தமக்கு இடைகாட்டினால்—
அன்ன நடை காட்டினால் பின்னல் ஜடைகாட்டினால்—பய
பக்தியோடு பட்சந்தன்னைக் காட்டாரோ—முத்துப்
பல் காட்டினால் படித்துச் சொல்காட்டும் நாவலரும்
பாட்டுப்பாடிப் பல்லைப்பலைக் காட்டாரோ—பெண்கள்
டணியாளராய்ச் சொல்லைக் கேளாரோ (விழி)

பெண்குலத்தைப் பேய்களென்ற பித்தர் தம்மையே—பெண்டு
பிள்ளை குட்டி உள்ளவராய் மாற்றி விடுவோம்—இந்த
மண்டலத்தில் காண்பதெல்லாம் சக்திமயமே—என்ற
மாண்புதனை நாங்கள் பறைசாற்றி வருவோம்
பெண்ணா லாகாததும் இனிமேலேது (விழி)

இயற்றியவர் — பாடியவர்
அ. மருதகசாசி — சுசீலா.

என் வாழ்வில் புதுப்பாதை கண்டேன்
ஏதும் தோணுமல் தடுமாறுகின்றேன் (என்)

காணுத நிலையே கண்டதனுலே
கங்குகரையின்றி பொங்கு கடல்போலே யானேனே
இது கனவோ அன்றி நனவோ
எனதன்பே நீ சொல்லாயோ (என்)

இருமனம் ஒன்றும் திருமணத்தாலே
இணையே இல்லாத இவ்வாழ்விலே
தேவை தன்னை உணர்ந்தே
சேவை செய்து மகிழ்வேன்
சிறந்த இன்பம் காணுவேன் (என்)

உறவாடும் காதல் சுகம் வரும்போது
உனை மறந்தாலே அதிசயமேது......கிடையாது
இது கனவோ அன்றி நனவோ
எனதன்பே நீ சொல்லாயோ (என்)

| இயற்றியவர் | பாடியவர்கள் |
| --- | --- |
| பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் | A. P. கோமளா, ஜமுனாராணி & கோரஸ். |

மருந்து விக்கிற மாப்பிள்ளைக்கு
விருந்து வைக்கணும் வாருங்கடி
பறந்து பறந்து ஆடுங்கடி — நம்ம
பழய பாட்டைப் பாடுங்கடி

மிரண்டு மிரண்டு முளிக்கிருரு
விவரம் என்ன கேளுங்கடி
விஷயம் புரிஞ்சு போகும் அவர்
பொட்டியை தொறந்து பாருங்கடி (மரு)

சூரணமா மாத்திரையா வேரை புடுங்கி அரைச்சதா
பூரணமா குணந்தருமா பொதிகை முனிவர் லேகியமா
என்னங்காணும் வைத்தியரே இப்படி நின்னு நடக்குமா
சின்னப்பிள்ளை நடிக்கிறீங்க சிரிபபில்கூட சிககனமா (மரு

பொல்லாத மயக்கமுங்க — சொல்லாமல்தான் வருதுங்க
எல்லாமே கசக்குதுங்க ஈரமலரும் சுடுதுங்க
என்னடி காசியம்மா இவருக்கு அது புரியுமா
சொல்லடியம்மா வியாதிகளை வெல்ல இவரால் முடியுமா? (மரு)

அந்தப்புறத்திலே வைத்தியம் பார்த்து
அநுபவம் இருக்கா இல்லையா — அவள்
தங்க கரத்திலே நாடி பார்க்கவும்
தைரிய மிருக்கா சொல்லையா (மரு)

இன்பக்குளத்திலே ஏகமலராக இருப்பவள்
எங்கள் எஜமானி—தினம்
இளமை குலுங்கவரும் எழில்ராணி அவள்
அன்பு மனதிலே என்ன இருக்குதோ

அறிந்துகொண்டால் நீர் பெரும் ஞானி
யாருக்கும் விளங்காதவள் பாவி... ஓய் ஓய்ஓய்
கொஞ்சுவா கெஞ்சுவா அஞ்சினு மிஞ்சுவா
மிஞ்சினு அஞ்சுவா கெஞ்சுவா கொஞ்சுவா தெரியுமா

ஆண் : சரியம்மா

பெண் : மருந்து......பாடுங்கடி !

இயற்றியவர் — கல்யாண சுந்தரம்
பாடியவர்கள் — பகவதி

இல்லற மாளிகையில் ஏற்றிவைத்த திருவிளக்கை
கள்வரிடம் பறிகொடுத்தே காண்பதெல்லாம் இருளாச்சே
உள்ளமெனும் மேடையிலே ஓடிவிளையாடையிலே
ஒருகால் ஒடிந்துவிட்டாய்

உய்யும் வழியேதம்மா
உய்யும் வழியேதம்மா
உய்யும் வழியேதம்மா

இயற்றியவர் — கண்ணதாசன்
பாடியவர்கள் — M. L. வஸந்தகுமாரி & சூலமங்கலம் ராஜலக்ஷ்மி

வருகிறாள் உமைத்தேடி—உன்
வாசலில் உருகி உருகி நின்று மணவாளன் நீயே என்று
தரணியின் மன்னவரும் தாள் பணிந்தாள்—செல்வம்
துரும்பெனத் தள்ளி இன்று தோகை மனம் துணிந்து (வருகி)

கனிந்த கனி இருந்தும், கண்கள் உமையழைத்தும்
காணுமல் புவி வாழ்வில் சுகமேது ஸ்வாமி
உறவினில் சுவை உண்டு கலையினில இவன் வண்டு
ஊடலும், கூடலும், கொஞ்சிப்பாடலும் மேவிய மாதிவள்
காதலினல் (வருகி

சந்தன கும்பம் சல்லாபம் உல்லாசம்
சந்ததம் காதல் சரச சங்கீதம்
இருவர் ஆவி ஒருவராக நிலவினில்
காதல் கொண்டு இன்பமே காணவும்
புதுமை கூறும் கலைகள் மேனி வாழவும்
காம வதன மோக நடன காவியமயில் (வருகி)

இயற்றியவர் — பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
பாடியவர் — பகவதி

ஒன்று பட்ட கணவனுக்கு
தொண்டு செய்து வாழ்வதற்கு
உரிமை கிடைத்திடுமா சொல்
வண்ணக்கிளியே—அன்பின்
பெருமை நிலைத்திடுமா சொல்

கன்று நட்டு நீரிரைத்து
கண் விழித்து காத்திருந்து
பிஞ்சுவிட்டுக் கனியாகும் போதிலே—கிளையில்
துண்டுபட்டால் என்ன பலன் வாழ்விலே (ஒன்று)

இயற்றியவர் | பாடியவர்கள்
கல்யாணசுந்தரம் | T. M. சௌந்தரராஜன் & P. லீலா

முகத்தில் முகம் பார்க்கலாம்—விரல்
நகத்தில் பவழத்தின் நிறம் பார்க்கலாம் (முக)

வருந்த கருங்குழலை மழைமுகிலெனச்சொன்னால்
மலரிணையிதழோடு இணை சேர்க்கலாம்—என்முன்
வளைந்து இளந்தென்றலில் மிதந்து வரும் கைகளில்
வளையல் இன்னிசை கேட்கலாம்—மானே உன் (முக)

இகத்திலிருக்கும் சுகம் எத்தனையானாலும்
இருவர்க்கும் பொதுவாக்கலாம்—அன்பே
அதன் எண்ணிக்கை விரிவாக்கலாம்—காதல்
அகத்தினில் அலைமோதும் ஆசையிலே இன்பம்
ஆயிரம் உருவாக்கலாம்—இன்பம்
ஆயிரம் உருவாக்கலாம்

இளமை பொங்கும் அங்கம் சிந்தும் அழகில்
தங்கம் மங்கும் நிலையில் நின்று
தன்னை மறந்து எண்ணம் கலந்து
வண்ணத்தோகை மயிலெனச் சோலைதனில்

பொழுதெலாம் மகிழலாம்
கலையெலாம் பழகலாம்—சதங்கையது
குலுங்கி நகைத்திட வரம்பு கடந்திடும்
குறும்பு படர்ந்திடும் (முக)

இயற்றியவர் | பாடியவர்
பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் | சீர்காழி கோவிந்தராஜன்

## சித்தர் விருத்தம்

விதியென்னும் குழந்தை கையில் உலகந்தன்னை
விளையாடக் கொடுத்துவிட்டாள் இயற்கையன்னை—அது
விட்டெறியும் உருட்டிவிடும் மனிதர் வாழ்வை
மேல் கீழாய்ப் புறட்டிவிடும் வியந்திடாதே
மதியுண்டு கற்புடைய மனைவியுண்டு வலிமையுண்டு
வெற்றி தரும் வருந்திடாதே
எதிர்த்து வரும் துன்பத்தை மிதிக்கும் தன்மை
எய்திவிட்டால் காண்பதெல்லாம் இன்பமப்பா

| இயற்றியவர் | பாடியவர் |
|---|---|
| பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் | என். சி. கிருஷ்ணன் & ரத்னமாலா |

ஆண் : எழுந்தென்னுடன் வாராய்—சொக்கம்மா
எழுந்தென்னுடன் வாராய்

பெண் : எங்கு என்னை அழைக்கிறாய்
என் மம்முத ராஜா

ஆண் : என்னோடே நீ வர ஏனடி தாமதம்

பெண் : ஏனென்று கேக்காதே கால் ரெண்டும் நோகுது

ஆண் : நோகாமல் சுகமெல்லாம் தானாக பிறக்குமா

பெண் : போகாத ஊரெல்லாம் போனாத்தான் பொறக்குமா

ஆண் : வசனம்-பெண்ணே, என் பொறுமையை சோதிக்காதே,
ஆத்திரம் வந்தால் உன்னை என்ன செய்வேன்
தெரியுமா ?

பெண் : வசனம்-என்ன செஞ்சிடுவே...ஹூக்கும்

ஆண் : கத்தியை உருவிக்குத்திடுவேன்
உன்னை கண்டதுண்டமாக வெட்டிடுவேன்

பெண் . நிறுத்தய்யா... நிறுத்தய்யா
நேரங்கெட்ட நேரத்திலே
ஊரைவிட்டு ஓடுவது எதுக்கய்யா

ஆண் : வாண்ணு வந்திடடி...மரியாதை யில்லாதவளே
ஏண்ணு கேக்காதே எதிர்த்துப்பேசாதே
எட்டி விரட்டிடுவேன்-உன்னைவிட்டு பிரிந்திடுவேன்

பெண் : நீயேசகாயமென நினையாமல்—நாதா
வாயால் மோசமே போனேன்—மதியாமல் பேதை
மாயம் எதுவும் இல்லைவருத்தம்கொள்ளாதேஎன்னை
மன்னித்தருளவேண்டும்
வந்தனம் செய்தேன் ஸ்வாமி

ஆண் : பத்தினி ரத்தினமே பறந்துவந்த சீதனமே
என் உத்தரவுபோல உத்தமி
நீயொரு உதவி தான் செய்யவேண்டும்

பெண் : வசனம் - என்ன உதவி செய்யணும்
அப்படியே ஆகட்டும் ஸ்வாமி

பெண் : பூமாலை போட்டுப்போன மாமா வருவதற்குள்
காமாலை வந்ததய்யா வைத்தியரே
மாமியார் வைத்துப்போன சாமானை வித்துத்தரேன்
மருந்தேதும் போடுமய்யா வைத்தியரே

ஆண் : கண்ணையிழந்தவளே கட்டழகு பெண்மயிலே
இந்த கைகண்ட மருந்தை
என் கைகொண்டு பூசினால்
கண்கண்ட குணம் பெறலாம்

இருவ : களிம்போ களிம்பு களிம்போ களிம்பு
காயத்திலே பெருங்காய மிருந்தாலும்
மாயமாய் மறைக்கும் களிம்பு
வெள்ளை களிம்பு கருங்களிம்பு வீரக்களிம்பு.

சொல்ல முடியாத நோய்களுக்கும்
ஒரு சூரணமிருக்கு வாங்கிடுங்கோ
அதை பல்லில் படாமலே
உள்ளுக்கு போடணும்
பாஷாணம் சேர்ந்தது பாத்துக்குங்கோ (களிம்போ)

இயற்றியவர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

பாடியவர்கள் டி.எம். சௌந்திரராஜன் & பி. லீலா

பெண் — இன்று நமதுள்ளமே பொங்கும் புது வெள்ளமே
இல்லற ஓடமதே இனிஇன்பம் ஏந்திச்செல்லுமே

ஆண் — மங்கையர் குலமணியே மஞ்சள் முகந்தனிலே
மகிழ்ச்சிகள் துள்ளுமே வந்தென்னை அள்ளுமே

பெண் — நேற்று நம்மைக் கண்ட நிலா
நெஞ்சுருகிச் சென்ற நிலா
வாழ்த்துகள் சொல்லுமே
மனந்தனைக்கிள்ளுமே

ஆண் — வள்ளுவன் வழியினிலே இனி வாழ்க்கை
[தரம் செல்லுமே

ஆண் — கண்ணிலே ஊறும் நீரும்—இனி
நம் நிலை காண தானும்—சுகம்
கவிதை பாடி வரும்

| இயற்றியவர் | பாடியவர் |
|---|---|
| கவிஞர் கண்ணதாசன் | பி. லீலா |

கொற்றவன் மதுரை மூதூர்
கொதித் தெழுந்தெரித்த தாயே
குற்றமில்லாத இந்தக்
குலமகள் கொழுநன் தன்னை
பற்றி வெஞ் சிறையில் போட்டார்
பாதகர் கணவர்க்காக
உற்ற தோர் உதவி கேட்க
உன்முனம் நிற்கின்றேன்யான்

வடிவத்தால் சிந்தனையால் வாக்கினால் கணவர் திரு
அடிதாழ்ந்து நெறிகாத்த அறமகளே கொற்றவனின்
படியேறி வழக்குரைத்த பத்தினியே நின் தூய
மடியேறிக் கண்பறிக்கும் குலமகளை மன்னிப்பாயே
நின்செயல்கள் ஒவ்வொன்றும் கணவர்க்கே
[என்பதெல்லாம் உண்மையானால்

என் செயலும் கணவர்க்கே இங்கு நான் வந்ததுவும்
[கணவருக்கே
மின்னிமைக்கும் நின் தங்கப்பதுமையிலே உன்மகள் நான்
கண்மணியை நெருங்குகின்றேன் கண்கொடுத்துக்
[கண்கள் காப்பாய்

| இயற்றியவர் | பாடியவர் |
|---|---|
| பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் | சி. எஸ். ஜெயராமன் |

ஈடற்ற பத்தினியின் இன்பத்தைக்கொன்றவன் நான்–அவள்
இதயத்தில்கொந்தளித்த எண்ணத்தைக்கொன்றவன் நான்
வாழத்தகுந்தவளை வாழாமல் வைத்துவிட்டு
பாழும் பரத்தையினால் பண்பதனைக் கொன்றவன் நான்
அந்தக் கொள்கைககே ஆளாய் விருந்துவிட்டேன் – இனி
எந்தக் கொலைசெய்தாலும் என்னடி என் ஞானப்பெண்ணே

மனிதன் ஆரம்பமாவது பெண்ணுக்குள்ளே – அவன்
ஆடி அடங்குவது மண்ணுக்குள்ளே
ஆராய்ந்து பார் மனக்கண்ணுக்குள்ளே
ஆத்திரங்கொள்ளாதே நெஞ்சுக்குள்ளே (ஆரம்ப)
அன்பைக்கெடுத்து நல் ஆசையைக் கொன்றவன் அஞ்சி
[நடப்பானோ ஞானப்பெண்ணே
துன்பத்தைக் கட்டிச் சுமக்கத்துணிந்தவன் சென்றாலும்
[கேட்பானோ ஞானப்பெண்ணே (ஆரம்ப)

தவறுக்கும் தவருன தவரைப் புரிந்துவிட்டு
தனிப்படடுப் போனவன் ஞானப்பெண்ணே
பதறிப்பதறி நின்று கதறிப் புலம்பினுலும்
பயன்பட்டு வருவானே ஞானப்பெண்ணே (ஆரம்ப)

கண்ணை கொடுத்தவனே பறித்துக்கொண்டாண்டி மானே
வளர்த்தவனே வெறுத்துவிட்டாண்டி (கண்ணை)
பொருத்தமான துணையிருந்தும்

பொங்கிவரும் அழகிருந்தும்
போனபக்கம் போகவிட்டேன் பார்வையை - அவன்
பொறுத்திருந்தே புரிந்துகொண்டான்வேலையை-(கண்ணை)
அவன் எதிரில்வந்து கொடுக்கவில்லை

இதயமிடம் கொடுக்கவில்லை
எங்கிருந்தோ ஏவிவிட்டான் கிளியை - அது
என் தலையில் போட்ட தடி பழியை (கொடுத்த)

சிங்காரம் கெட்டுச்சிறைப்பட்டபாவிக்கு
சம்ஸாரம் ஏதுக்கடி - என் தங்கம்

சம்ஸாரம் ஏதுக்கடி
மனைவியைக் குழந்தையை மறந்து திரிந்தவனை
வாழ்த்துவதாகாதடி - என் தங்கம்
மன்னிக்கக்கூடாதடி (சிங்காரம்)

இயற்றியவர் — பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

பாடியவர் — பி. லீலா

விருத்தம்

பறித்த கண்ணைப்பதித்துவிட்டேன்
பதிவிரியே நீ எந்தன் கணவன் கண்ணை
எடுதத கையால் கொடுத்துவிடு
ஏழைககு வாழ்வு கொடு இதயக்கோயில்
அடுத்தவளே அருள்மணியே
அறங்காத்த தமிழ்மகளே அம்மா உன்மேல்
ஆணையிட்டுக் கேட்கின்றேன் அன்பிருந்தால்
பணபிருந்தால் கண்கொடம்மா

ஏழைக்கு உன்னருள் எட்டாத சிகரமோ இன்னமும் [கணகள் குருடோ

இரு செவியும் மந்தமோ - நான் - அழுதகுரல் [கொஞ்சமோ

இதயமும் கல்லானதோ இரக்கம் பிறக்கவில்லையோ.

## பாட்டு.

வாய்திறந்து சொல்லம்மா உன்
மகளின் கதையைக் கேளம்மா துன்பம்
வரை கடந்து போன பின்பும் மௌனமா நீதி
முறை கடந்த நீயும் பெண்கள் தெய்வமா

பெற்றுதா வென்று வேண்டும்
மதுரைத்திருநகரமதிரசிகரத்தோடு குரலும் உயர
மறைகற்றவர் பதறப்பொறி சிதறிய நாவெங்கே
மகரகொடியும் கொறறவன் மணிபொன்முடியும் கட்டோடு
மண்ணில் வீழப்பொங்கிய மனமெங்கே (வாய்திறந்து)
கண்ணிலுதிரும் மலரெடுத்து கற்புநாரில் சரம் தொடுத்து
அன்னையே உன் காலடியில் சாற்றினேன் — தினம்

ஆலயத்தில அன்புவிளக்கேற்றினேன்
உன்னை நம்பிநம்பி என்றும போற்றினேன் இன்று
ஒளியிழந்த கணவரோடு நிற்கிறேன்
செம்பும கலலும் தெய்வமென்று
நமபுவோர்கள் பித்தரென்று சித்தர்கள்
உரைத்தமொழி மெய்தானோ

சிற்பிகள் செதுக்கிவைத்த சித்திரச்சிலைகளுக்குள்
தேவி வந்திருப்பதுவும் பொய்தானோ

தனிச்சிலமபெடுத்து ஊர்தழற் படச்சினந்தெரித்த
சகதியுளாடெனப் படைத்த கர்வமோ

மனைச்சுகம் கெடுத்து கண்மணிச்சுடர்தனைப்பறித்து
வாடவைத்தல் நீ வளர்த்த தர்மமோ
அமமா......அம்மா......அம்மா.

EVEREADY PRINTERS, MADRAS-17